**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement -13 ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

**1)** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதல் அந்தாதியைப் பாடியவர்?

A) நம்மாழ்வார் B) திருமழிசை ஆழ்வார்

C) பூதத்தாழ்வார் D) பொய்கையாழ்வார்

**2)** முதனிலை தொழிற்பெயர் என்பது?

1. விகுதிபெறாமல் வருவருவது
2. வினைப்பகுதி சற்று மாறி வருவது
3. வினை எவ்வகை மாற்றமும் பெறாமல் தொழிற்பெயராக அமைவது
4. வினைப்பகுதியுடன் தொழிற்பெயர் விகுதி சேர்ந்து வருவது

A) 1 & 2 B) 2 & 3

C) 1 & 3 D) மேற்கண்ட எதுவுமில்லை

**3)** தருமிக்குப் பாண்டிய மன்னன் பொற்கிழி வழங்கிய திருவிளையாடல் புராணக் காட்சியானது எங்கு செதுக்கப்பட்டுள்ளது?

A) உலகத் தமிழ்ச் சங்க நுழைவாயிலில்

B) செம்மொழிப்பூங்காவின் உட்புறச் சுற்றுச் சுவரில்

C) சிற்பக்கலைக்கூடத்தின் தூண்களில்

D) சங்கத்தமிழ்க் காட்சிக்கூடத்தின் நுழைவாயிலில்

**4)** பின்வரும் தொடர்களில் எது (வை) சரி?

1. புனையா ஓவியங்கள் பற்றி "புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்" என்று கூறும் நூல் பரிபாடல்
2. புனையா ஓவியங்கள் பற்றி "புனையா ஓவியம் புறம் போந்தன்ன" என்று கூறும் நூல் சீவக சிந்தாமணி.

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 & 2 D) எதுவுமில்லை

**5)** "உலகம் உண்ண உண். உடுத்த உடுப்பாய் என்ற கவிஞர்?

A) பாரதிதாசன் B) நாமக்கல் கவிஞர்

C) சுத்தானந்த பாரதியார் D) தாராபாரதி

**6)** உவமை வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றும்படி கூறுவது?

A) உருவக அணி B) ஏகதேச உருவக அணி

C) சொல்பின்வருநிலை அணி D) தன்மை அணி

**7)** பொருந்தாத இணை எது?

A) தமிழழகனார் - சண்முகசுந்தரம் B) வாணிதாசன் - ரெங்கசாமி

C) பெருஞ்சித்திரனார் - மாணிக்கம் D) காளமேகப்புலவர் - இராமன்

**8)** தஞ்சைப் பெரியகோயிலின் கருவறைச் சுற்றுச்சுவரிலும் மண்டபங்களின் சுவர்களிலும் யாருடைய வாழ்க்கை நிகழ்வுகள் சுவர் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன?

A) திருநாவுக்கரசர் B) திருஞனசம்பந்தர் C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

**9)** நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் யார், நாட்காட்டி ஓவியங்களை எவ்வாறு அழைப்பர்?

A) விக்கிரமாதித்யன், கலம்காரி பெயிண்டிங்
B) இராஜா ரவிவர்மா, கலம்காரி பெயிண்டிங்
C) வான்கோ, பசார் பெயிண்டிங்
D) கொண்டைராஜூ, பசார் பெயிண்டிங்

**10)** சரியான தொடர்கள் எவை?

1. சுவற்றை சமப்படுத்தி ஓவியம் வரைவர்
2. சுவரை சமப்படுத்தி ஓவியம் வரைவர்
3. கொழும்புவில் நடைபெற்ற போட்டியில் இந்தியா வென்றது
4. கொழும்பில் நடைபெற்ற போட்டியில் இந்தியா வென்றது

A) 1 & 4 B) 2 & 3 C) 1 & 3 D) 2 & 4

**11)** "தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும் / சண்டை சச்சரவு - தினம் தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும் பேசும் பொய்யுறவு! என்ற பாடலை இயற்றியவர்?

A) பாரதிதாசன் B) கண்ணதாசன் C) வாணிதாசன் D) சுப்புரத்தின தாசன்

**12)** "தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்" என்று புகழ்ந்தவர் யார்?

A) தந்தைப் பெரியார் B) நாவலர் நெடுஞ்செழியன் C) அறிஞர் அண்ணா D) மு. கருணாநிதி

**13)** சடுகுடு போட்டியில் தமிழ்நாடு வெற்றி பெற்றது என்ற தொடரில் தமிழ்நாடு என்னும் பெயர் அவ்விடத்தைச் சேர்ந்த விளையாட்டு அணியைக் குறிப்பதால் இஃது .................................. ஆகும்

A) பொருளாகுபெயர்
B) இடவாகு பெயர்
C) காலவாகு பெயர்
D) சினையாகு பெயர்

**14)** "ஏய், பாம்பு பாம்பு பாம்பு பாம்பு!" - இத்தொடரில் அமைந்துள்ளது ______.

A) அடுக்குத்தொடர் B) இரட்டைக்கிளவி C) தொழிலாகு பெயர் D) பண்பாகுபெயர்

**15)** மக்கள் அனைவரும் _________ ஒத்த இயல்புடையவர்கள்.

A) பிறப்பால் B) நிறத்தால் C) குணத்தால் D) பணத்தால்

**16)** மழை இல்லாமல் வறட்சி நிலவிய காலத்திலும் பாரியின் மகள்கள் அங்கவை, சங்கவை ஆகியோர் பரிசில் அளித்ததாகப் பாடுபவர்?

A) மாங்குடி மருதனார்
B) கபிலர்
C) ஔவையார்
D) மூன்றுறை அரையனார்

**17)** பொருத்துக:

1. குழி - அ) நீட்டல் அளவைப்பெயர்
2. சாண் - ஆ) நில அளவைப்பெயர்
3. மணி - இ) தலையில் வைக்கும் துணிச்சுருள்
4. மடை - ஈ) முற்றிய நெல்
5. சும்மாடு - உ) வயலுக்கு நீர் வரும் வழி

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ

B) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-உ, 5-இ

C) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ

D) 1-ஆ, 2-அ, 3-உ, 4-இ, 5-ஈ

**18)** பின்வருவனவற்றுள் தாமிரபரணியின் கிளை ஆறுகளில் சேராதது எது?

A) பச்சையாறு, சிற்றாரு | B) மணிமுத்தாறு, காரையாறு

C) கடனாநதி, சேர்வலாறு | D) பாலாறு, மோயர் ஆறு

**19)** பின்வருவனவற்றுள் எது (வை) சரி?

1. கொற்கையில் நடைபெற்ற முத்துக்குளித்தல் குறித்து 'முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை' என்று சிறப்பித்து விளக்கும் சங்க நூல் கலித்தொகை ஆகும்

2. 'கொற்கையில் பெருந்துறை முத்து' என்ற பாடல் இடம்பெற்ற இலக்கியம் நெடுந்தொகை ஆகும்.

A) 1 மட்டும் | B) 2 மட்டும்

C) 1 & 2 | D) ஏதுமில்லை

**20)** "பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில் நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன நாவலர்க்கு" என்ற பாடலைப் பாடியவர்?

A) திருஞானசம்பந்தர் | B) அண்ணாமலையார்

C) நமசிவாயப்புலவர் | D) அருணகிரிநாதர்

**21)** இரசிகமணி டி.கே.சி எவ்வாறு போற்றப்படவில்லை?

A) கடித இலக்கியத்தின் முன்னோடி | B) வளர்தமிழ் ஆர்வலர்

C) குற்றால முனிவர் | D) நாற்றிசைக் காவலர்

**22)** "மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று, ஆனைகட்டிப் போரடிக்கும் அழகான ________." என்பது ஒரு நாட்டுப்புற பாடலாகும்.

A) தென்மதுரை | B) பாஞ்சாலங்குறிச்சி

C) சோழநாடு | D) திருவாரூர்

**23)** பொன் நாணயங்களை உருவாக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) சேமங்கலம் | B) பொற்குழாம்

C) கொற்கை | D) அக்கசாலை

ETW ACADEMY

**24)** பொருத்துக:

1. கற்கும் முறை - அ) செயல்
2. உயிர்க்குக் கண்கள் - ஆ) காகம்
3. விழுச்செல்வம் - இ) பிழையில்லாமல் கற்றல்
4. எண்ணித் துணிக - ஈ) எண்ணும் எழுத்தும்
5. கரவா கரைந்துண்ணும் - உ) கல்வி

A) 1-இ, 2-ஈ, 3-உ, 4-அ, 5-ஆ
B) 1-இ, 2-ஈ, 3-அ, 4-உ, 5-ஆ
C) 1-ஈ, 2-இ, 3-உ, 4-அ, 5-ஆ
D) 1-இ, 2-ஈ, 3-உ, 4-ஆ, 5-அ

**25)** பிறருடைய குற்றத்தைக் காண்பதுபோல தம்முடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் எது இல்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) மரணம் B) நரகம் C) துன்பம் D) வறுமை

**26)** எவ்வளவு பெருமையுடையதாக இருந்தாலும், செயல் சிறப்பு இல்லாதவரிடத்தில் பயனில்லாதது என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது?

A) அறம் B) அரண் C) கல்வி D) செல்வம்

**27)** ஒருவர் தன் நெஞ்சில் .................. இல்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

A) அவா B) வெகுளி C) சோர்வு D) அழுக்காறு

**28)** தம் குடியைச் சிறப்புடைய குடியாகச் செய்ய விரும்புபவர், எதைத் துன்பமாகக் கருதவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A) ஏழ்மையை B) ஊக்கத்தை C) நோயை D) சோம்பலை

**29)** துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதனை வெல்பவர்கள் யாரென திருவள்ளுவர் கூறுகிறார்?

A) ஊக்கம் உடையவர்கள்
B) நகைச்சுவை உணர்ச்சி உடையவர்கள்
C) ஆராய்ந்து முடிவு செய்பவர்கள்
D) துன்பம் வந்தபோது வருந்திக் கலங்காதவர்

**30)** திருவெஃகாவில் பிறந்தவர்?

A) குலசேகர ஆழ்வார் B) பேயாழ்வார் C) பூதத்தாழ்வார் D) பொய்கையாழ்வார்

**31)** ஆழ்வார்கள் 12 பேரினால் இயற்றப்பட்ட நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

A) நம்பியாண்டார் நம்பி B) சமண முனிவர்கள் C) நல்லந்துவனார் D) நாதமுனிகள்

**32)** நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் ஆகிய நூல்களின் ஆசிரியர்?

A) வீ.முனிசாமி
B) இரசிகமணி
C) கி.வ.ஜெகன்நாதன்
D) குன்றக்குடி அடிகளார்

**33)** "வையம் தகளியா வார்கடலே நெய்யாக / வெய்ய கதிரோன் விளக்காக" - இந்த பாடலில் அமைந்துள்ள அணி யாது?

A) சிலேடை அணி B) ஏகதேச உருவக அணி C) உருவக அணி D) உயர்வு நவிற்சி அணி



ETW ACADEMY

**34)** பின்வருபவர்களில் முதலாழ்வார்களில் சேராதவர்?

A) பொய்கை ஆழ்வார் B) பூதத்தாழ்வார் C) பேயாழ்வார் D) நம்மாழ்வார்

**35)** இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி - என்று துவங்கும் பாடலை இயற்றியவர்?

A) முனைப்பாடியார் B) பொய்கையாழ்வார் C) பூதத்தாழ்வார் D) நம்மாழ்வார்

**36)** பின்வரும் எது தேனரசனின் கவிதை நூல் ஆகும்?

A) மண்வாசல் B) கருப்பு ரோஜா

C) தந்து பழகிய மேகம் D) மேற்கண்ட அனைத்தும்

**37)** திருவானைக்கா உலா என்ற நூலை எழுதியவர் யார்?

A) காளமேகப்புலவர் B) சேக்கிழார் C) கம்பர் D) புகழேந்தி

**38)** தமிழில் முதன்முதலில் கருத்துப்பட ஓவியங்களை பாரதியார் எந்த இதழில் அறிமுகப்படுத்தினார்?

A) சுதேசமித்திரன் B) விஜயா C) இந்தியா D) இந்து

**39)** இந்தியாவில் உள்ள தொன்மையான நூலகங்களுள் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் எந்த ஆண்டு முதல் இயங்கி வருவதாகக் கல்வெட்டுச் செய்திகள் கூறுகின்றன?

A) கி.பி. 522 B) கி.பி. 1122 C) கி.பி. 722 D) கி.பி. 1522

**40)** வள்ளுவர் கோட்டத்தைக் கருத்தில் கொண்டு, தவறாகப் பொருந்தியுள்ளதைக் கண்டறி

A) அறத்துப்பால் - பழுப்புநிறப் பளிங்குக் கல் B) பொருட்பால் - வெண்ணிறப் பளிங்குக் கல்

C) இன்பத்துப்பால் - செந்நிறப் பளிங்குக் கல் D) மேற்கண்ட எதுவுமில்லை

**41)** பூம்புகார் சிற்பக் கலைகூடத்தில், கண்ணகியின் வரலாற்றை விளக்கும் எத்தனை சிற்பத் தொகுதிகள் இடம்பெற்றுள்ளன? அங்கு மாதவிக்கு எத்தனை நெடிய சிலைகள் நிறுவப்பட்டுள்ளன?

A) 14, 5 B) 25, 3 C) 49, 1 D) 27, 2

**42)** தொழிற்பெயர் ___ இடத்தில் மட்டுமே வரும்

A) தன்மை B) முன்னிலை

C) படர்க்கை D) மேற்கண்ட அனைத்தும்

**43)** இவற்றுள் எது தொழிற்பெயர் விகுதி அல்ல?

A) கு B) மி C) வை D) மை

**44)** ஓவியத்தைக் குறிக்கும் வேறு சொல்?

A) ஓவம்

B) படம்

C) படாம்

D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**45)** பின்வரும் தொடர்களில் கண்ணதாசனோடு பொருந்தாத தொடரைக் கண்டறிக.

A) கவியரசு என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.

B) காவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்

C) கண்ணதாசன் தம் சேரமான் காதலி என்ற கவிதை நூலுக்காக சாகித்ய அகாதெமி விருதுபெற்றுள்ளார்.

D) அர்த்தமுள்ள இந்துமதம் இயற்றிய நூலாசிரியர் ஆவார்.

**46)** சே. பிருந்தா இயற்றிய கவிதை நூல் எது?

A) மழை பற்றிய பகிர்தல்கள்

B) வீடு முழுக்க வானம்

C) மகளுக்குச் சொன்ன கதை

D) மேற்கண்ட அனைத்தும்

**47)** பாவண்ணன் எழுதிய நூல்களில் சேராதது?

A) வேர்கள் தொலைவில் இருக்கின்றன

B) நேற்று வாழ்ந்தவர்கள்

C) கடலோர வீடு

D) ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும்

**48)** "மல்லிகை சூடினாள்" என்றத் தொடரில் இடம்பெறும் ஆகுபெயர்?

A) பொருளாகுபெயர் B) இடவாகு பெயர் C) காலவாகு பெயர் D) சினையாகு பெயர்

**49)** பின்வருவனவற்றுள் தவறான கூற்றைக் கண்டறிக.

A) அடுக்குத் தொடரில் ஒரே சொல் இரண்டு முதல் நான்கு முறை வரை வரும்.

B) அடுக்குத் தொடரில் சொற்கள் தனித்தனியே நிற்கும்.

C) இரட்டைக்கிளவியில் ஒரு சொல் இரண்டு முறை மட்டுமே வரும்.

D) இரட்டைக்கிளவி பெயருக்கு அடைமொழியாகக் குறிப்புப் பொருளில் வரும்

**50)** பல்வேறு தொழில்கள் குறித்த நாட்டுப்புறப் பாடல்களை 'மலை அருவி' என்னும் நூலாகத் தொகுத்தவர்?

A) ஆறு.இராமநாதன் B) நா.வானமாமலை C) கி.வா. ஜகந்நாதன் D) செ.இராசு

**51)** வேணு வனம் என்பதன் பொருள் என்ன?

A) நெல் வயல்

B) பூங்காவை உடைய காடு

C) அரணான காடு

D) மூங்கில் காடு

**52)** பின்வருபவைகளில் சரியானது(வை)?

1. 'திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி' என்று பாடிய நாயன்மார் திருஞானசம்பந்தர் ஆவார்

2. 'தண்பொருநைப் புனல் நாடு' என்று திருநெல்வேலியின் சிறப்பைப் போற்றியவர் ஜெயங்கொண்டார்

A) 1 மட்டும்

B) 2 மட்டும்

C) 1 & 2

D) மேற்கண்ட எதுவுமில்லை

**53)** தமது வீட்டில் "வட்டத்தொட்டி" என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்களை நடத்தியவர்?

A) ஞானி

B) சி.சு.செல்லப்பா

C) ஜெயகாந்தன்

D) டி.கே.சிதம்பரநாதர்

ETW ACADEMY

**54)** பின்வருவனவற்றுள் உவம உருபுகளில் சேராதது எது?

A) போல, புரைய, அன்ன B) சால, உறு, தவ, நனி

C) இன்ன, அற்று, இற்று D) மான, கடுப்ப, ஒப்ப, உறழ

**55)** திருநெல்வேலி ________ மன்னர்களோடு தொடர்பு உடையது.

A) சேர B) சோழ C) பாண்டிய D) பல்லவ

**56)** "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் / குறுகத் தரித்த குறள்" என்று திருக்குறளின் பெருமையைப் போற்றியவர்?

A) ஔவையார் B) மங்கையர்கரசியார்

C) வெள்ளிவீதியார் D) காக்கைப்பாடினியார்

**57)** ஒரு யானையைக்கொண்டு மற்றொரு யானையைப் பிடிப்பது போல எதையும் செய்துகொள்ள வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) ஒரு செயலைச் செய்யும்போதே அச்செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல் வேண்டும்.

B) ஒருவேளை உணவு உட்கொள்ளும்போதே அடுத்த வேளைக்கும் உணவு உட்கொண்டுவிட வேண்டும்

C) ஒன்றைக் கற்கும்போதே அச்செயலால் மற்றொன்றையும் கற்கவேண்டும்

D) ஒருவருக்கு உதவி செய்யும்போதே அச்செயலால் மற்றொருவருக்கும் உதவி செய்யவேண்டும்

**58)** எதன் அளவுக்கு ஏற்ப மக்களுக்கு அறிவு வளரும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) தோண்டும் அளவிற்கு ஏற்ப B) கற்கும் அளவிற்கு ஏற்ப

C) கேட்கும் அளவிற்கு ஏற்ப D) புரியும் அளவிற்கு ஏற்ப

**59)** ஒருவர் தன்னைவிட மெலிந்தவரை துன்புறுத்தும்போது எதை எண்ணிப் பார்த்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) தன்னை விட பெருமையுடையவர் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை

B) தன்னை விட வலிமையுடையவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை

C) தன்னை விட அறிவுடையரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை

D) மேற்கண்ட அனைத்தும்

**60)** "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா" என்று துவங்கும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் இரண்டாம் திருவந்தாதிப் பாடலைப் பாடிய ஆழ்வார் யார்?

A) பெரியாழ்வார் B) பூதத்தாழ்வார் C) நம்மாழ்வார் D) பொய்கையாழ்வார்

**61)** பைங்கூழ் என்ற சொல்லின் பொருள் என்ன?

A) விதை B) வேண்டாத செடி C) பசுமையான பயிர் D) கடுஞ்சொல்

**62)** "செல்வத்து பயனே ஈதல் / துய்ப்போம் எனினே தப்புந பலவே" என்னும் பாடலடிகள் இடம்பெற்ற சங்க நூல்?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) புறநானூறு D) அறனெறிச்சாரம்

ETW ACADEMY

63) ஜென் என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

A) சும்மா இரு B) தியானம் செய்

C) அமைதியாக இரு D) அமைதியாக கவனி

64) கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகப்படுத்தி, மற்றொன்றை உருவகப்படுத்தாமல் விடுவது எந்த அணி?

A) உருவக அணி B) ஏகதேச உருவக அணி

C) சொல்பின்வருநிலை அணி D) தன்மை அணி

65) காளமேகப்புலவரின் நூல் அல்லாதது எது?

A) சரசுவதி மாலை B) இரத்தினகிரி உலா C) பரபிரம்ம விளக்கம் D) சித்திர மடல்

66) பின்வரும் எங்கு சுவர் ஓவியங்களைப் பார்க்க முடியும்?

A) விராலிமலை B) பறம்புமலை C) கொல்லிமலை D) சித்தன்னவாசல்

67) தற்காலத்தில் துணி ஓவியங்களை "கலம்காரி ஓவியங்கள்" என்ற பெயரில் எங்குள்ள ஓவியர்கள் வரைந்துவருகின்றனர்?

A) தமிழ்நாடு & ஆந்திரா B) ஆந்திரா & கர்நாடகா

C) கர்நாடகா & கேரளா D) கேரளா & தமிழ்நாடு

68) தமது கல்வியைவிட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி காயிதே மில்லத் அவர்கள் கலந்துகொண்ட போராட்டம்?

A) கிலாபத் இயக்கம் B) கள்ளுக்கடை மறியல்

C) ஒத்துழையாமை இயக்கம் D) உப்பு சத்தியாகிரகம்

69) காயிதே மில்லத் என்னும் அரபுச்சொல்லுக்கு என்ன பொருள்?

A) சமுதாய ஒளிவிளக்கு B) சமுதாய வழிகாட்டி

C) சமூக சேவகர் D) சமூகப்பணிக் காவலர்

70) பாய்மரக்கப்பல், மீசைக்கார பூனை, பிராயாணம் உள்ளிட்ட நூல்களை எழுதியவர் யார்?

A) பாவண்ணன் B) சே.பிருந்தா C) யூமா வாசுகி D) தேனரசன்

71) "தலைக்கு ஒரு பழம் கொடு" - என்ற தொடரில் இடம்பெறும் ஆகுபெயர்?

A) தொழிலாகு பெயர் B) சினையாகு பெயர் C) பொருளாகுபெயர் D) முதலாகுபெயர்

72) "பொதியி லயினும் இமய மாயினும் / பதியெழு அறியாப் பழங்குடி" என பொதிகை மலைக்கு முதலிடம் கொடுத்துப் பாடியவர்?

A) திருஞானசம்பந்தர் B) சேக்கிழார்

C) கபிலர் D) இளங்கோவடிகள்

73) திருக்குறளின் பொருட்பால் பகுதியில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

A) 25 B) 70 C) 38 D) 133

ETW ACADEMY

**74)** திருவள்ளுவர் குறிப்பிடும் 4 அரண்களில் சேராதது?

A) தெளிந்த நீர்
B) நிலமும், மலையும்
C) மரம்
D) அழகிய நிழல் உடைய காடு

**75)** திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நலைபெறும் திங்கள் திருவிழாவினை 'திங்கள் நாள்விழா மல்கு திருநெல் வேலியுறை செல்வர் தாமே' என்று பதிவு செய்தவர் யார்?

A) ஆளுடையப் பிள்ளையார்
B) தருமசேனர்
C) தம்பிரான் தோழர்
D) திருவாதவூரடிகள்

**76)** இல்பொருள் உவமை அணிக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டு ஒன்றைத் தேர்ந்தெடுக்க.

A) மீன் போன்ற கண்
B) மணற்கேணி
C) பாதமலர்
D) பொன்மழை பொழிந்தது போல்

**77)** யாருடைய வறுமை சான்றோரால் ஆராயப்படுமென வள்ளுவர் கூறுகிறார்?

A) பொறாமை கொண்டவனின்
B) பொறாமை இல்லாதவனின்
C) அறம் உடையவனின்
D) அறம் இலாதவனின்

**78)** எது வாய்மை என்று வள்ளுவர் கூறுகிறார்?

A) தீமையில்லாத சொற்களை சொல்லுதல்
B) உண்மையை சொல்லுதல்
C) பொய் சொல்லாமலிருத்தல்
D) மேற்கண்ட அனைத்தும்

**79)** மிக்க பசியும், ஓயாத நோயும், அழிவு செய்யும் பகையும் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே .............

A) வாழ்க்கை
B) குடும்பம்
C) நாடு
D) அறம்

**80)** பின்வரும் குறட்பாக்களில் உவமையணி பயின்றுவரும் குறளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

A) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா / செய்தொழில் வேற்றுமை யான்.
B) வினையான் வினையாக்கிக் கோடல் தனைகவுள் / யானையால் யானையாத் தற்று.
C) கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற / மிக்காருள் மிக்க கொளல்.
D) மேற்கண்ட அனைத்தும்

**81)** கண்ணாடி ஓவியங்களை உருவாக்கும் ஓவியர்கள் அதிகமாக எங்கு காணப்படுகின்றனர்?

A) மதுரை
B) தஞ்சை
C) காஞ்சி
D) சென்னை

**82)** இந்திய ஆட்சிப்பணி பயிற்சியாளர்களுக்குத் தமிழ்மொழிப் பயிற்சியை வழங்குவது

A) தமிழ்ப் பல்கலைக்கழகம்
B) செம்மொழி ஆராய்ச்சி நிலையம்
C) தமிழ் வளர்ச்சித் துறை
D) மேற்கண்ட அனைத்தும்

**83)** தமிழ்நாட்டின் மைய நூலகம் எது?

A) சென்னை கீழ்த்திசை நூலகம்
B) சென்னை உ.வே.சா நூலகம்
C) சென்னை கன்னிமாரா நூலகம்
D) சென்னை அண்ணா நூலகம்

ETW ACADEMY

**84)** "தமிழ் படிக்கும் பேறு பெற்றேன்" என்றத் தொடரில் 'பேறு' என்பது?

A) விகுதி பெற்ற தொழிற்பெயர் B) முதனிலைத் தொழிற்பெயர்
C) முதனிலை திரிந்த தொழிற்பெயர் D) மேற்கண்ட எதுவுமில்லை

**85)** "இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்" என காயிதே மில்லத்தைப் பாராட்டியவர்?

A) தந்தைப் பெரியார் B) நாவலர் நெடுஞ்செழியன் C) அறிஞர் அண்ணா D) மு. கருணாநிதி

**86)** பாவண்ணன் எந்த மொழியிலிருந்து பல நூல்களை மொழிபெயர்த்துள்ளார்?

A) ஆங்கிலம் B) மலையாளம் C) கன்னடம் D) தெலுங்கு

**87)** திருநெல்வேலியில் தாமிரபரணி நதியும் சிற்றாறும் கலக்கின்ற இடத்தின் பெயர் என்ன?

1. முக்கூடல் 2. கொற்கை 3. சீவலப்பேரி

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) 1, 2 & 3

**88)** கடிகை முத்துப்புலவர் எட்டையபுரத்தில் பாரதியாருக்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு இருந்தவர்?

A) 200 B) 150 C) 250 D) 300

**89)** 'மயில் போல ஆடினாள்' - இந்த தொடரில் இடம்பெற்றுள்ள அணி என்ன?

A) தன்மை அணி B) உருவக அணி C) உவமை அணி D) பாவிக அணி

**90)** எவை இரண்டும் மக்களுக்கு கண்கள் போன்றவை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) அறிவும் செல்வமும் B) அருளும் பொருளும்
C) அன்பும் அறிவும் D) எண்ணும் எழுத்தும்

**91)** "---- துணிந்த பின் / எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற குறள் கூறும் கருத்து என்ன?

A) எந்தச் செயலையும் அடுத்தவரிடம் கேட்காமல் தொடங்க வேண்டும்
B) எந்தச் செயலையும் அடுத்தவரிடம் கேட்டபிறகே தொடங்க வேண்டும்
C) எந்தச் செயலையும் பெரியோரிடம் கேட்டு அதன் பின் தொடங்க வேண்டும்
D) எந்தச் செயலையும் நன்கு சிந்தித்த பின் தொடங்க வேண்டும்

**92)** "அரிச்சந்திரர் நாடகம் பார்த்த காந்தியடிகள் இனி தம் வாழ்வில் பொய்யே பேசக்கூடாது என்று நினைத்தார். காந்தியடிகளி பொய் பேசாத பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது." - மேற்கண்டதற்கு பொருத்தமான திருக்குறள் எது?

A) ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து / அழுக்காறு இலாத இயல்பு
B) வாய்மை எனப்ப டுவது யாதெனின் யாதொன்றும் / தீமை இலாத சொலல்.
C) உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் / உள்ளத்துள் எல்லாம் உளன்.
D) மேற்கண்டது அனைத்தும்

**93)** கற்றவருள் மிகவும் கற்றவராக யார் மதிக்கப்படுவார் என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) கற்றவர் முன் தெளிவாக சொல்ல வல்லவர் B) கல்லாதார் முன் தெளிவாக சொல்ல வல்லவர்
C) இல்லாதார் முன் தெளிவாக சொல்ல வல்லவர் D) மற்றவர் முன் தெளிவாக சொல்ல வல்லவர்

ETW ACADEMY

**94)** இவற்றுள் ஓவியருக்கு வழங்கப்படும் வேறுபெயர் அல்லாதது எது?

A) எழுதெழில் அம்பலவானர் B) ஓவமாக்கள்

C) கிளவி வல்லோன் D) வித்தகர்

**95)** பொருத்துக:

1. ஒட்டம் - அ) முதனிலைத் தொழிற்பெயர்

2. பிடி - ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

3. சூடு - இ) விகுதி பெற்ற தொழிற்பெயர

A) 1-ஆ, 2-இ, 3-அ B) 1-அ, 2-ஆ, 3-இ C) 1-இ, 2-அ, 3-ஆ D) 1-இ, 2-ஆ, 3-அ

**96)** "கற்க கசடறக் கற்பவை" எனத் துவங்கும் திருக்குறள் கூறும் கருத்து அல்லாதது எது?

A) கற்க வேண்டியவற்றைப் பிழை இல்லாமல் கற்க வேண்டும்

B) கற்றபின் சரியான வேலைக்குச் செல்லவேண்டும்

C) கற்றபின் கற்ற வழியில் நடக்க வேண்டும்

D) மேற்கண்ட எதுவுமில்லை

**97)** ...................... சேரும் வளத்தை உடைய நாடு சிறந்த நாடு ஆகாது.

A) முயற்சி செய்து B) முயற்சியில்லாமல்

C) உழவு செய்து D) உழவு செய்யாமல்

**98)** ஒருவர் இல்லாதபோது எவற்றைச் செய்யக்கூடாது என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

A) பொய் கூறுதல் B) புறங்கூறுதல்

C) மெய் கூறுதல் D) புகழ்ந்து கூறுதல்

**99)** சிறந்த அரசின் செயல் என திருவள்ளுவர் கூறும் நான்கு செயல்களின் சரியான வரிசை எது?

1. பொருள் வரும் வழிகளை அறிதல்

2. அவ்வழிகளில் பொருள்களைச் சேர்த்தல்

3. சேர்த்த பொருளை பாதுகாத்தல்

4. காத்த பொருளை பயனளிக்கும் வகையில் திட்டமிட்டு செலவிடுதல்

A) 3 - 4 - 1 - 2 B) 2 - 3 - 4 - 1 C) 1 - 2 - 3 - 4 D) 4 - 1 - 2 - 3

**100)** பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் / ................ உடைய செயல்

A) அருமை B) சிறுமை C) வெறுமை D) திறமை

**101)** பொருந்தா இணை எது?

A) லக்பாகூஷா - குத்புதீன் ஐபக்

B) நாற்பதின்மரை ஒழித்தவர் - அலாவுதீன் கில்ஜி

C) அமிர்குஸ்ருவை ஆதரித்தவர் - பால்பன்

D) தலைநகரை தேவகிரிக்கு மாற்றியவர் - ஜானா கான்

**102)** ஒன்று மற்றும் சரியாகப் பொருந்தியுள்ளது. அது எது?

A) பெரோஷ் ஷா துக்ளக் - அடையாள நாணய முறையை அறிமுகப்படுத்தியவர்

B) அலாவுதீன் கில்ஜி - ஜிஸியா வரியை முதன்முதலில் விதித்தவர்

C) சிக்கந்தர் லோடி - லோடி மரபின் சிறந்த அரசர்

D) அலாவுதீன் ஆலம் ஷா - சயது வம்சத்தின் முதல் சுல்தான்

**103)** சமச்சீர் காலநிலை என்பது வேறு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) அமெரிக்க காலநிலை B) பிரிட்டிஷ் காலநிலை

C) பிரெஞ்சு காலநிலை D) மெக்சிகோ காலநிலை

**104)** உலகின் மிகநீளமான அணை எது?

A) துங்கபத்திரா அணை B) ஹிராகுட் அணை

C) தெகிரி அணை D) தாமோதர் அணை

**105)** மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்கிய சட்டம் எது?

A) ஒழுங்குமுறைச் சட்டம் 1773 B) இந்திய அரசுச் சட்டம் 1909

C) இந்திய அரசுச் சட்டம் 1919 D) இந்திய அரசுச் சட்டம் 1935

**106)** அரசமைப்பின் 249 வது உறுப்பின் படி, ஒரு அதிகாரத்தை மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு நாடாளுமன்றத்தின் எந்த அவையால் மாற்றமுடியும்?

A) மக்களவை B) மாநிலங்களவை C) A அல்லது B D) A மற்றும் B

**107)** சிவாஜியின் அஷ்டபிரதானைக் கருத்தில்கொண்டு தவறான இணையைக் காண்

A) அமத்யா / மஜீம்தார் - நிதி அமைச்சர் B) துபிர் / டாபிர் - வெளியுறவுச் செயலர்

C) சர் - இ - நௌபத் / சாரிநௌபத் - தலைமைத் தளபதி D) சச்சிவ் / சுருநாவிஸ் - தமைமை நீதிபதி

**108)** முதலாம் பாஜிராவ் காலத்தில் தக்காணப்பகுதியில் தடையில்லா வணிகம் செய்யும் உரிமையைப் பெற்றவர்கள் யார்?

A) ஆங்கிலேயர்கள் B) போர்சுகீசியர்கள் C) டேனியர்கள் D) பிரஞ்சுக்காரர்கள்

**109)** பாரசீக அராபிய மொழிகளில் புலமை பெற்றவரான பாபரின் நினைவுக் குறிப்புகள் "துசுக் - இ - பாபுரி" எம்மொழியில் எழுதப்பட்டது?

A) அரபு B) பாரசீகம் C) துருக்கி D) இந்துஸ்தானி

**110)** டெல்லியில் தீன்பனா என்ற புதிய நகரை நிர்மானித்தவர்?

A) ஹுமாயூன் B) ஷாஜஹான் C) அக்பர் D) ஜெகாங்கீர்

**111)** அமைச்சரவைச் செயலகம் (Cabinet Secretariat) யாருடைய நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்குகிறது?

A) குடியரசுத்தலைவர் B) மத்திய தலைமைச் செயலாளர்

C) பிரதமர் D) அமைச்சரவைச் செயலாளர்

ETW ACADEMY

**112)** பின்வரும் வாக்கியங்களில் எது (வை) சரி?

1. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம், அபராதம் விதிக்கும் அதிகாரம் ஆகியவை மத்திய அரசிடம் உள்ளன.

2. இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கான ஊதியம் & ஓய்வூதியம் மத்திய அரசால் வழங்கப்படும்

A) 1 மட்டும் B) 2 மட்டும் C) 1 & 2 D) ஏதுமில்லை

**113)** பின்வருபவர்களில், ராயத்துவாரி முறை மீது ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்தவர் யார்?

A) தாமஸ் மன்றோ B) திரிமென் கீரே

C) சி.எஸ்.ஜான் D) அலெக்ஸாண்டர் கார்டியூ

**114)** முதல் வகுப்புவாரி தீர்மானத்தை முனிசாமி அவர்கள் கொண்டுவந்தபோது, அதை முன்மொழிந்தவர் மற்றும் வழிமொழிந்தவர் முறையே?

A) சர். ஆர். கே. சண்முகம், டாக்டர் நடேசனார் B) டாக்டர் நடேசனார், டி.எம். நாயர்

C) டாக்டர். சி. நடேசனார், சர்.ஆர்.கே சண்முகம் D) டி.எம். நாயர், டாக்டர் நடேசனார்

**115)** சட்டநாதன் ஆணயத்தின் பரிந்துரையின்படி 1971 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டு வரம்பு எத்தனை சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டது?

A) 17 B) 15 C) 18 D) 22

**116)** 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட முதல் கிராமம் என்ற பெருமையைப் பெற்ற வீயான் கிராமம் எம்மாநிலத்தச் சேர்ந்தது?

A) அசாம் B) உத்தரபிரதேசம் C) ஜம்மு காஷ்மீர் D) சிக்கிம்

**117)** அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் வெளியிட்டுள்ள வாழ்வதற்கு உகந்த நகரங்கள் பட்டியலில் முதலிடம் பெற்ற நகரம்?

A) சென்னை B) பெங்களூரு C) மும்பை D) புவனேஷ்வர்

**118)** நீட் தேர்விற்கு மாற்று வழிமுறைகளை ஆராய யார் தலைமையிலான ஒரு உயர்நிலைக் குழுவை தமிழக அரசு அமைத்தது?

A) நீதிபதி ராஜன் B) நீதிபதி சதாசிவம்

C) நீதிபதி குமாரசாமி D) நீதிபதி ரத்தினவேல்

**119)** கேண்டிலா என்பது எதன் அலகு ஆகும்?

A) ஒளியின் ஊடுருவுதிறன் B) ஒளிவிலகல்

C) ஒளிச்செறிவு D) ஒளிஎதிரொலிப்பு எண்

**120)** திசைவேகம் என்பது?

A) இடப்பெயர்ச்சி x காலம் B) இடப்பெயர்ச்சி / விசை

C) நிறை x முடுக்கம் D) இடப்பெயர்ச்சி / காலம்

ETW ACADEMY

**121)** சூரிய மையக் கோட்பாட்டை வெளியிட்டவர்?

A) தாலமி
B) கோபர் நிகஸ்
C) பிளேட்டோ
D) மேற்கண்ட எவருமில்லை

**122)** ஒரு ஒளி ஆண்டு எனப்படுவது?

A) $9.467 \times 10^{15}$ கி.மீ
B) $9.467 \times 10^{23}$ கி.மீ
C) $7.467 \times 10^{15}$ கி.மீ
D) $7.467 \times 10^{23}$ கி.மீ

**123)** சிவப்புக்கோள் என்றழைக்கப்படுவது?

A) வெள்ளி B) வியாழன் C) யுரேனஸ் D) செவ்வாய்

**124)** தவறான இணை எது?

A) ஜேம்ஸ் பிரின்சிபே ஆய்வு - 1837
B) எல்லிஸ் ஆய்வு - 1836
C) கால்டுவெல் ஆய்வு - 1856
D) ஏதுமில்லை

**125)** யாருடைய அறிக்கையானது, மக்கள் தொகையில் மூன்று சதவீதம் மட்டும் அங்கம் வகிக்கும் பிராமணர்கள், அனைத்து வாய்ப்புகளையும் எடுத்துக்கொண்டார்கள் என்பதை நிரூபித்தது?

A) சர். வில்லியம் ஜோர்டன்
B) சர். ஜேம்ஸ் வில்லிங்க்டன்
C) சர். அலெக்சாண்டர் ஜோர்டன்
D) சர். ஐசக் வில்லிங்க்டன்

**126)** டெல்ஹி சுல்தானிய அமைச்சர்களைப் பொருத்துக

(i) வசீர் - 1. வெளியுறவு அமைச்சர்
(ii) திவானி ரிஸாலத் - 2. அஞ்சல் துறை அமைச்சர்
(iii) திவானி இன்ஷா - 3. பாதுகாப்புத்துறை அமைச்சர்
(iv) திவானி அர்ஸ் - 4. நீதிதுறை அமைச்சர்
(v) காஸி-உல்-கஸாத் - 5. பிரதம அமைச்சர் மற்றும் நியமைச்சர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 3 | 4 | 5 | 1 | 2 |
| C) | 4 | 5 | 1 | 2 | 3 |
| D) | 5 | 1 | 2 | 3 | 4 |

**127)** இமயமலைகள் எங்கிருந்து வீசும் கடும் குளிர்காற்றை தடுத்து, இந்திய துணை கண்டத்தை வெப்பப் பகுதியாக வைத்திருக்கிறது?

A) மேற்கு ஆசியா
B) கிழக்கு ஆசியா
C) தெற்கு ஆசியா
D) மத்திய ஆசியா

**128)** எந்தெந்த கடற்கரைப் பகுதிகளில் விளையும் “மாங்காய்கள்” விரைவில் முதிர்வதற்கு உதவும் இடியுடன் கூடிய மழைக்கு மாஞ்சாரல் என்று பெயர்?

A) தமிழகம் & ஆந்திரா
B) தமிழகம் & கேரளா
C) கேரளா & கர்நாடகா
D) கர்நாடகா & ஆந்திரா

ETW ACADEMY

**129)** மத்திய மாநில அரசாங்கங்களுக்கு இடையே அதிகாரப் பகிர்வு மூன்று தளங்களில் காணப்படுகிறது. அவை யாவை?

1. சட்டமன்ற அதிகாரப் பகிர்வு
2. ஆட்சித்துறை அதிகாரப் பகிர்வு
3. நீதித்துறை அதிகாரப் பகிர்வு
4. நிதித்துறை அதிகாரப் பகிர்வு

A) 1, 2 & 3 B) 1, 2 & 4 C) 1, 3 & 4 D) 1, 3 & 4

**130)** இந்தியாவைப் பொருத்தவரை, மூன்று பட்டியல்களில் இடம்பெறாத அதிகாரங்கள் எல்லாம் எந்த அரசாங்கத்தின் ஆளுமையின் கீழ் வருகின்றன?

A) மத்திய அரசு B) மாநில அரசு

C) நாடாளுமன்ற மேலவை D) இவையனைத்தும்

**131)** இந்திய கூட்டாட்சியை கூட்டுறவுக் கூட்டாட்சி என வர்ணித்த அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசமைப்பு நிபுணர் யார்?

A) கிரான்வில் ஆஸ்டின் B) மோரிஸ் டி மோரிஸ்

C) அலெக்ஸாண்ட்ராவிக்ஸ் D) பேராசிரியர் வேர்

**132)** நதி நீர்த் தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினரை நியமிப்பவர் யார்?

A) மாநிலங்களவைத் தலைவர் B) குடியரசுத் தலைவர்

C) பிரதமர் D) உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி

**133)** மாநில ஆளுநர்கள் கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதாக விமர்சித்த குழு எது?

A) புன்ச்சி குழு B) ராஜமன்னார் குழு

C) சர்க்காரியா குழு D) வெங்கட செல்லய்யா குழு

**134)** அண்ணல் அம்பேத்கர் அரசமைப்பின் உறுப்பு 356-யை எவ்வாறு வர்ணித்தார்?

A) சொல்லக்கூடாத வார்த்தை B) அத்யாவசியமற்ற வார்த்தை

C) தேவையற்ற வார்த்தை D) கட்டுப்பாடான வார்த்தை

**135)** 1803இல் ஆண்டில் நிறுவப்பட்ட ______ சத்திரம், இரண்டாம் சரபோஜியின் விருப்பமான அன்ன சத்திரமாகும்.

A) கண்ணாம்பாள் B) ஜகதாம்பாள் C) மகதாம்பாள் D) முக்தாம்பாள்

**136)** அக்பரைப் பற்றிய தவறான தொடர்?

1. அக்பர் உருவாக்கிய புதிய தலைநகர் பதேபூர்சிக்ரி
2. 1582ல் அக்பர் அறிவித்த புதிய மதம் தீன் இலாஹி
3. அக்பர் பரப்புரை செய்த தத்துவம் 'சுல்க்-இ-குல்'
4. அக்பரின் கோட்பாடு - தௌகித்-இ-இலாகி

A) 1 & 4 B) 2 & 4

C) 3 மட்டும் D) மேற்கண்ட எதுவுமில்லை

**137)** ஷரியத் சட்டத்தினால் ஏற்கப்படவில்லை எனக் காரணம் கூறி, ஔரங்கசிப் நீக்கிய வரி எது?

A) சுங்க வரி B) இந்து புனித பயண வரி C) ஜிஸியா வரி D) அப்வாப் வரி

**138)** 1977 ஆம் ஆண்டு வரை பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டுவந்தது, யாருடைய காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது?

A) சந்திரசேகர் B) வி.பி.சிங்

C) மொராஜி தேசாய் D) இந்திரா காந்தி

**139)** இந்தியக் காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ______ தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர்.

A) ஜெவகர்லால் நேரு B) சர்தார் பட்டேல்

C) பகத்சிங் D) சுபாஷ் சந்திர போஸ்

**140)** இவற்றுள் சுதந்திரத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அனைத்திந்தியப் பணி எது?

A) இந்திய ஆட்சிப்பணி B) இந்திய காவல் பணி

C) இந்திய வனப் பணி D) இவையனைத்தும்

**141)** பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் அனுமதிக்கப்படுவதைத் தடுக்கக்கூடாது என்று இங்கிலாந்தில் உள்ள இந்தியாவுக்கான அமைச்சரே ஆணையிட்ட ஆண்டு எது?

A) 1858 B) 1860 C) 1862 D) 1865

**142)** வேலை வாய்ப்புகளில், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநித்துவம் வேண்டிசர்.பி. தியாகராயர் எழுதி வெளியிட்ட அறிக்கை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) பிற்படுத்தப்பட்டோர் அறிக்கை B) தாழ்த்தப்பட்டோர் அறிக்கை

C) சிறுபான்மையினர் அறிக்கை D) பிராமணரல்லாதோர் அறிக்கை

**143)** நீதிக்கட்சியால் முதல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு என்ன?

A) 1920, செப்டம்பர் 20 B) 1921 செப்டம்பர் 16

C) 1921 ஆகஸ்ட் 16 D) 1922 ஆகஸ்ட் 15

**144)** இந்திய அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்குப் பின் தமிழ்நாட்டில் 1951 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கு எத்தனை சதவீதம் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது?

A) 17 B) 21 C) 18 D) 25

**145)** தமிழகத்தில் வழங்கப்படும் 69% இட ஒதுக்கீட்டுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படுதலை தவிர்க்க, இச்சட்டத்தை இந்திய அரசியலமைப்பின் எந்த அட்டவணையில் சேர்க்க, தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்தது?

A) IX B) X C) XI D) XII

**146)** மண்டல் ஆணையத்தின் செயலராக செயல்பட்டவர் யார்?

A) வி.வி. கிரி B) எஸ்.எஸ். கில்

C) அனுமந்தையா D) மதன் மோகன் புன்ச்சி

ETW ACADEMY

**147)** நீதிக்கட்சியின் கொடியில் இடம்பெற்றிந்தது?

A) நீதி தேவதை B) தராசு C) புலி, மீன் & வில் D) யானை

**148)** பெரியார் காங்கிரசை விட்டு விலகி சுயமரியாதை இயக்கத்தை தொடங்கிய ஆண்டு என்ன?

A) 1935 B) 1925 C) 1938 D) 1937

**149)** 1929 ஆம் ஆண்டு முதலாவது சுயமரியாதை மாநாடு நடைபெற்ற இடம் எது?

A) சேலம் B) கரூர் C) சென்னை D) செங்கல்பட்டு

**150)** நீதிக்கட்சியின் வீழ்சிக்கான மூன்று முக்கியக் காரணங்களில் சேராதது எது?

A) இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே மட்டுமே ஆதரவு பெற்றிருந்தது.

B) பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது.

C) அதன் உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம்.

D) மேற்கண்ட எதுவுமில்லை

**151)** தற்போது இந்தியாவிலுள்ள மூன்று அனைத்திந்திய பணிகளில் சேராதது எது?

A) இந்திய ஆட்சிப் பணி (IAS) B) இந்தியக் காவல் பணி (IPS)

C) இந்திய வனப் பணி (IFS) D) இந்திய ஃபாரீன் பணி (IFS)

**152)** இந்திய சமூகப் பொருளாத நிலையை விளக்கும் தாருக்கி - உல் - இந்த் என்ற நூலை எழுதியவர் யார்?

A) அல்பரூணி B) அமிர்குஸ்ரு

C) தாராஷூகோ D) ரஹீம் கான் - இ - கானான்

**153)** சரியான வாக்கியம் எது?

A) மாம்லுக் மரபினை நிறுவியவர் பால்பன்

B) இந்தியக்கிளி என்றழைக்கப்பட்டவர் அல்பரூனி

C) துருக்கிய நணயமுறையை முதலில் அறிமுகப்படுத்தியவர் இல்துமிஷ்

D) மேற்கண்ட அனைத்தும்

**154)** ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வடமேற்கு திசையிலிருந்து வீசும் தலக்காற்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) சின்னூக் அல்லது கால்பைசாகி B) சிராக்கோ அல்லது ஆர்மத்தான்

C) நார்வெஸ்டர் அல்லது கால்பைசாகி D) கால்பைசாகி அல்லது ஆர்மத்தான்

**155)** உலகில் மிகப் பெரிய சதுப்பு நிலக் காடுகள் காணப்படும் டெல்டா பகுதி எது?

A) காவிரி - கிருஷ்ணா டெல்டா

B) சிந்து - பிரம்மபுத்திரா டெல்டா

C) கங்கை - பிரம்மபுத்திரா டெல்டா

D) மகாநதி - துங்கபத்ரா டெல்டா

**156)** தவறான இணையை காண்

1. கெய்க்வாட் - நாக்பூர்
2. பான்ஸ்லே - பரோடா
3. ஹோல்கார் - இந்தூர்
4. சிந்தியா - குவாலியர்
5. பேஷ்வா - புனே

A) 1ம் 5ம் மட்டும் B) 1ம் 3ம் மட்டும் C) 1ம் 2ம் மட்டும் D) 1ம் 4ம் மட்டும்

**157)** நானா சாகிப் என்றழைக்கப்பட்டவர்?

A) பாலாஜி விஸ்வநாத் B) சிவாஜி

C) மாதவ்ராவ் D) பாலாஜி பாஜிராவ்

**158)** "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" - என்பது யாருடைய வார்த்தைகள்?

A) ஸ்டேன்லி லேன்பூல் B) ராமச்சந்திர குஹா

C) கேத்லின் கௌ D) விண்டர் நீட்ஸ்

**159)** அக்பரின் காலத்தில் விவசாயிகளும், அரசாங்கமும் செய்துகொண்ட நிலவரி சம்பந்தமான ஒப்பந்தத்தின் பெயர் என்ன?

A) மன்சப்தார் B) மஃப்ருஸி C) குபிலியாத் D) பஞ்சார்

**160)** மத்தியக் குடிமைப் பணிகளிலேயே மிக உயர்ந்த கவுரவமும், தகுதிநிலையும், ஊதியமும், ஆதாயமும் கொண்டவை?

A) இந்திய ஆட்சிப் பணி B) இந்திய காவல் பணி

C) இந்திய வனப் பணி D) இந்திய வெளியுறவுப் பணி

**161)** 1928 வாக்கில் யார் தலைமையில் நீதிக்கட்சி செயல்பட்டபோது அரசின் எல்லாத்துறைகளிலும், பணிநியமனங்கள் முறைப்படுத்தப்பட்டு அரசாணையின் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நிரந்தரமாக்கப்பட்டது?

A) அ. சுப்பராயலு B) இரா. முத்தையா C) பி. சுப்பராயன் D) பனகல் அரசர்

**162)** "சமூக ரீதியிலும் பொருளாதாரரீதியிலும் பின்தங்கியவர்களுக்குச் சில சிறப்புச் சட்டங்கள் மற்றும் சலுகைகள் வழங்கலாம்" என அரசுக்கு அதிகாரம் வழங்கியுள்ள அரசமைப்புச் சட்டப் பிரிவுகள் என்னென்ன?

A) பிரிவு 15 & 16 B) பிரிவு 15 & 17 C) பிரிவு 15 & 18 D) பிரிவு 15 & 41

**163)** மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு மத்திய அரசின் வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27% சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பித்த அரசு?

A) இந்திராகாந்தி அரசு B) மொராஜி தேசாய் அரசு

C) ஐ.கே. குஜரால் அரசு D) வி.பி. சிங் அரசு

ETW ACADEMY

**164)** நீதிக்கட்சியின் பெயரை திராவிடர் கழகம் என்று பெயர்மாற்றம் செய்வதற்கான தீர்மானத்தை கொண்டுவந்தவர் யார்?

A) கி. வீரமணி B) பட்டுக்கோட்டை அழகிரி

C) நாவலர் நெடுஞ்செழியன் D) அறிஞர் அண்ணா

**165)** தமிழகத்தில் உணவுப் பாதுகாப்பிற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் யார்?

A) அறிஞர் அண்ணா B) சர்.பிட்டி.தியாகராயர்

C) ராஜாஜி D) பனகல் அரசர்

**166)** பின்வருவனவற்றுள் எதெல்லாம் அண்ணா கொண்டுவந்தவை?

1. அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி திட்டம்
2. குடிசை மாற்று வாரியம்
3. பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி
4. சைக்கிள் ரிக்ஷா ஒழிப்பு
5. மெட்ராஸ் மாநிலத்தை தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்தது

A) 1, 3 & 4 மட்டும் B) 1,2 & 4 மட்டும் C) 1,2 & 5 மட்டும் D) 1,3 & 5 மட்டும்

**167)** இந்தியாவில் அதிக அளவில் காணப்படும் மண் எது?

A) செம்மண் B) வண்டல்மண் C) காடு & மலை மண் D) கரிசல் மண்

**168)** 2017-ஆம் ஆண்டு இந்திய நீர்ப்பாசன புள்ளிவிவரப் புத்தகத்தின்படி, 2013 - 2014 ஆம் ஆண்டு காலத்தில் ஏரிப் பாசனத்தில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

A) ஆந்திரப்பிரதேசம் B) மத்தியப்பிரதேசம் C) கர்நாடகா D) தமிழ்நாடு

**169)** கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களைக் கட்டியவர் யார்?

A) சிவாஜி B) சாஹூ மஹாராஜா

C) பாலாஜி பாஜிராவ் D) பாலாஜி விஸ்வநாத்

**170)** 1835 வரை புழக்கத்தில் இருந்த "தாம்" என்ற வெள்ளி நாணயங்களை அறிமுகப்படுத்தியவர் யார்?

A) ஷாஜகான் B) ஷெர்ஷா C) அக்பர் D) ஔரங்கசீப்

**171)** கல்சா என்ற இராணுவ அமைப்பினை உருவாக்கி ஔரங்கசீப்பை இறுதிவரை எதிர்த்தவர் யார்?

A) கவிகலாஷ் B) ஜெய்சிங் C) சாம்பாஜி D) கோவிந்த்சிங்

**172)** இந்திய அரசு அமைத்த முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் எது?

A) மண்டல் ஆணையம் B) காகா கலேல்கர் ஆணையம்

C) புன்ச்சி ஆணையம் D) கோத்தாரி ஆணையம்

**173)** ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகத்தினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் ஆகியோருக்கு சமூக-அரசியல்-பொருளாதார அரங்கில் அதிகாரமளிப்பதற்காக உருவானதே?

A) சமதர்மம் B) சமூகநலம் C) சமூகநீதி D) இடஒதுக்கீடு



ETW ACADEMY

**174)** கம்பு உற்பத்தியில் முதன்மை மாநிலமாக விளங்குவது எது?

A) இராஜஸ்தான் B) உத்திரபிரதேசம் C) ஹரியானா D) ஜார்கண்ட்

**175)** இந்தியாவில் தேயிலை உற்பத்தி செய்யும் முதன்மை மாநிலம் எது?

A) தமிழ்நாடு B) மேற்குவங்கம் C) அசாம் D) கர்நாடகா

**176)** இரு வேட்பாளர்களுக்கான தேர்தலில் 20% ஓட்டுகள் செல்லாதவை. மொத்த செல்லும் ஓட்டுகளில் 55% ஒருவருக்கு கிடைக்கிறது. மொத்த ஓட்டுக்களின் எண்ணிக்கை 7500 எனில் மற்ற வேட்பாளர் பெற்ற செல்லும் ஓட்டுகளின் எண்ணிகை என்ன?

A) 2950 B) 1540 C) 3300 D) 4000

**177)** ஒரு குறிப்பிட்ட ஆண்டில், பொருள் 'அ'-வின் ஏற்றுமதி ரூபாய் 290 கோடியாகவும், பொருள் 'ஆ'-வின் ஏற்றுமதி ரூபாய் 210 கோடியாகவும் உள்ளதெனில், மொத்த ஏற்றுமதியில் அ-வின் ஏற்றுமதி ஆ-வின் ஏற்றுமதியை விட எத்தனை சதவீதம் அதிகம்?

A) 16 % B) 24 % C) 12 % D) 20 %

**178)** A-இன் ஊதியம் B-யின் ஊதியத்தைவிட 50% அதிகமெனில் B-யின் ஊதியம் A-வின் ஊதியத்தை விட எவ்வளவு குறைவு ஆகும்?

A) 66 1/5% B) 50% C) 25% D) 33 1/3%

**179)** A-இன் ஊதியம் B-யின் ஊதியத்தைவிட 50% குறைவு எனில் B-யின் ஊதியம் A-வின் ஊதியத்தை விட எவ்வளவு அதிகம் ஆகும்?

A) 50% B) 33 1/3% C) 25& D) 100%

**180)** ஒரு பொருளின் விலை முதலில் 10% உயர்த்தப்படுகிறது. பின் மீண்டும் 20 % உயர்த்தப்படுகிறது. இப்போது அதன் விலை ரூபாய் 132 எனில் அப்பொருளின் பழைய விலை எவ்வளவு?

A) ரூ. 100 B) ரூ. 110 C) ரூ. 120 D) ரூ. 122

**181)** 40-இன் 15 சதவீதமானது, மற்றொரு எண்ணின் 25 சதவீதத்தை விட இரண்டு அதிகம் எனில் அந்த எண் யாது?

A) 14 B) 16 C) 20 D) 18

**182)** 16 பெட்டிகளின் அடக்கவிலையானது 12 பெட்டிகளின் விற்பனை விலைக்குச் சமம் எனில் லாப சதவீதம் என்ன?

A) 33 1/3% B) 23 1/3% C) 25% D) 66%

**183)** ஒரு கைகடிகாரத்தை ரூபாய் 2000-ற்கு விற்பனை செய்ய பட்டியலிட்டு, பட்டியல் விலையிலிருந்து 30% தள்ளுபடி வழங்கப்படுகிறது. அந்த கைகடிகாரத்தை ரூபாய் 1260-ற்கு விற்பனை செய்தால் கூடுதலாக எத்தனை சதவீதம் தள்ளுபடி வழங்கியிருக்க வேண்டும்?

A) 5% B) 12% C) 8% D) 10%

**184)** இரண்டு செல்போன்கள் ஒவ்வொன்றையும் ரூபாய் 1800-ற்கு ஒருவர் விற்றார். இதில் ஒன்றில் 20% லாபமும், மற்றொன்றில் 20% நட்டமும் ஏற்பட்டது எனில் மொத்தத்தில் அவருக்கு ஏற்பட்ட லாபம் அல்லது நட்ட சதவீதம் என்ன?

A) 2% லாபம் B) 2% நட்டம் C) 4% லாபம் D) 4% நட்டம்

**185)** 400-ஐ விட 25% குறைவான எண்?

A) 250 B) 300 C) 260 D) 280

**186)** ஓர் எண்ணில் 16 2/3 சதவீதம் என்பது 40 எனில் அந்த எண் யாது?

A) 260 B) 280 C) 120 D) 240

**187)** இரண்டு எண்களின் வித்தியாசமானது பெரிய எண்ணில் 40% ஆகும். சிறிய எண் 48 எனில் பெரிய எண்?

A) 80 B) 60 C) 68 D) 88

**188)** ஒரு மூலப்பொருளில் 25% காப்பர் உள்ளது. நமக்கு 100 கிலோ காப்பர் வேண்டுமெனில் தேவைப்படும் மூலப்பொருளின் அளவு?

A) 800 கிலோ B) 600 கிலோ C) 400 கிலோ D) 200 கிலோ

**189)** ஒரு லிட்டர் பாலின் விலை ரூ.20. அதன் விலை 30% அதிகமாகி பின்னர் 15% குறைக்கப்பட்டது எனில் இப்போது ஒரு லிட்டர் பாலின் விலை என்ன?

A) 25 B) 22.10 C) 25.40 D) 23.20

**190)** நேற்றைய சந்தை மதிப்பை அறிந்த ஒருவர் சர்க்கரைவாங்க குறிப்பிட்ட அளவு பணம் எடுத்துக்கொண்டு கடைக்கு செல்கிறார். சர்க்கரையின் விலை இன்று 40% குறைக்கப்படுகிறது. அவர் கொண்டு செல்லும் பணத்தில் எத்தனை சதவீத அளவு அதிகமாக சர்க்கரை வாங்க முடியும்?

A) 33 2/3% B) 66 2/3% C) 60% D) 24%

**191)** ஒரு வகுப்பிலுள்ள 36 மாணவர்களில் 75% பேர் கணிதப்பாடத்தில் திறமையானவர்கள் எனில், கணிதப் பாடத்தில் திறமையற்றோர் எத்தனை பேர்?

A) 9 பேர் B) 8 பேர் C) 12 பேர் D) 14 பேர்

**192)** பாலின் விலை 1% உயர்த்தப்பட்டால் ஒருவர் வைத்துள்ள பணத்தில் எத்தனை சதவீத அளவு பாலை குறைத்து வாங்குவார்?

A) .089% B) 1% C) 3% D) 0.99%

**193)** ஒரு நகரின் மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு 8% வீதம் அதிகரிக்கிறது. தற்போதைய மக்கள் தொகை 7,29,000 எனில், 2 ஆண்டுகளுக்கு முன் அந்த நகரின் மக்கள் தொகை எவ்வளவு?

A) 625000 B) 585000 C) 639000 D) 592000

**194)** ஒரு வியாபாரி தன்னிடமுள்ள துணிகளில் பாதியை 10% லாபத்திற்கும் மீதமுள்ள துணிகளில் பாதியை 10% நட்டத்திற்கும் மீதி துணையை அடக்க விலைக்கும் விற்பனை செய்தால், அவர் பெற்ற லாப அல்லது நட்ட சதவீதத்தைக் காண்க.

A) 2.5% B) 1%
C) 2% D) 3.2%

ETW ACADEMY

**195)** ஒருவர் ஒரு கிலோ ரூபாய் 10 விலையுள்ள 28 கிலோ அரிசியை ஒரு கிலோ ரூபாய் 36 விலையுள்ள 20 கிலோ அரிசியுடன் கலந்து, ஒரு கிலோ அரிசையை ரூபாய் 30க்கு விற்கிறார் எனில் அவருக்குக் கிடைத்த லாப அல்லது நட்ட சதவீதம் காண்க.

A) 50% B) 64% C) 46% D) 44%

**196)** ஒரு புத்தகத்தின் விலை 30% குறைக்கப்பட்டு சில நாட்களுக்குப் பிறகு 30% உயர்த்தப்பட்டால் இறுதியாக எவ்வளவு சதவீதம் குறைவு ஏற்படும்?

A) 9% B) 24% C) 18% D) 14%

**197)** ராம் தனது வருமானத்தில் 20% சேமிக்கிறார். 2 வருடங்களுக்குப்பிறகு அவரது வருமானம் 40% கூடுகிறது. அவரது சேமிப்பு 20% எனில் அவரது செலவு எத்தனை சதவீதம் கூடுகிறது?

A) 20% B) 40% C) 50% D) 33 2/3%

**198)** 44 - ல் 25% எவ்வளவு?

A) 17 B) 11 C) 22 D) 13

**199)** 25% of 360 - 15% of 240 - இன் மதிப்பு காண்க.

A) 54 B) 46 C) 64 D) 80

**200)** 18 கிராமில் 7.2 கிராம் என்பது எத்தனை சதவீதமாகும்?

A) 0.5 B) 0.25 C) 0.225 D) 0.625

***

© ETW Academy

ETW ACADEMY